**பாததும்பர பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 05 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பாததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

----------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 483,572 இற்கான பொது களஞ்சிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதி பட்டோலையின் பிரகாரம் ரூபா 456,602 ஆக காணப்பட்டமையால், ரூபா 26,970 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த நீர் கட்டணம் கணக்குகளின் பிரகாரம் ரூபா 298,016 இற்கான மீதி பட்டோலையின் பிரகாரம், ரூபா 407,320 ஆக காணப்பட்டமையால் ரூபா 109,304 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

---------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 32,177,598 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடகாலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 411,097 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய 04 மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 750,294 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் பெறுமதி ரூபா 892,664 இற்கான பலவின வைப்புக்கள், கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,881,271 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,530,468 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 6,350,803 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மிகை முன்னைய ஆண்டிற்கான மிகை உடன் ஒப்பீடு செய்யும் போது, ரூபா 24,255,273 இற்கான அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக 2013 ஆண்டின் போது, 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 60 வரையான அதிகரிப்பு மற்றும் 04 செலவு விடயங்களில் நூற்றிற்கு 26

முதல் நூற்றிற்கு 87 வரை செலவுகள் குறைந்துள்ளமை காரணமாக அமைந்துள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்பு தொகையாக ரூபா 15,605,244 தொகையொன்று கிடைத்திருந்தது எனினும் சம்பள மற்றும் படிகள் என ரூபா 19,366,815 தொகையொன்று செலுத்தியிருந்தது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் இருந்து ரூபா 3,761,571 இற்கான தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த அத்தொகை சபையின் மீண்டுவரும் வருமானத்தின் நூற்றிற்கு 13 என அவதானிக்கப்பட்டது.

2.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்கள் உடன் நடைமுறை பொறுப்புக்கள் இடையே விகிதாசாரம் 1.69:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் விகிதாசாரம் 1.05:1 உச்ச மட்டமொன்றில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டமையால், ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 59 எனும் ரூபா 34 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன்பட்டோர் ஆகக் காணப்பட்டதுடன் மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 70 எனும் ரூபா 24 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன்கொடுத்தோர் அடங்கியுள்ளது.

2.4 வருமான நிருவாகம்

--------------------------------

2.4.1 கடை வாடகை

---------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 427,292 ஆகும். மடவலை வர்த்தக தொடர் கட்டடத்தில் 10 ஆம் இலக்க கடையில் ரூபா 33,000 இற்கான நிலுவை வாடகை சுமார் 04 வருடங்கள் காலம் முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 119,167 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 1,418,480 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வாய்வு

----------------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஜனவரி 31 கணக்காய்வு திகதி வரை சபை 24 வழக்குகளுக்காக ரூபா 867,300 இற்கான தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. இந்த வழக்குகளில் 13 வழக்குகள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் முடிவுக்கு வந்திருக்கவில்லை.

(ஆ) 2007 ஆண்டின் போது ஓய்வு பெற்றுள்ள அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,886 இற்கான பதவியணிக் கடன் கணக்காய்வுத் திகதியாகிய 2014 ஆகஸ்ட் 18 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்பாடுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்தக்கள்

---

மடவல வர்த்தக தொடர் கட்டடத்தில் 05 கடைகள் 2011 ஆண்டு முதல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்ததுடன் ரூபா 600,000 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டி மற்றும் டெயிலர்வண்டி 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

பாதீட்டு கட்டுப்பாடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானமும் செலவுகளும் மற்றும் உள்ளவாறான வருமானங்களும் செலவுகளுக்கிடையே 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 46 வரையும், 6 செலவு விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் நூற்றிற்கு 73 வரையும் முரண்கள் காணப்பட்டமையால், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 02 வருமான விடயங்களை சேர்ந்த 03 உப விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 155,500 இற்கான வருமான அறவீடு சதவீதம் நூற்றிற்கு 0 ஆக காணப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு